

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் கிழக்கு இளைஞர் அணி சார்பில் தெருமுனை பிரச்சாரம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தலைமையில் ஒன்றிய செயலாளர் ஆர்.டி.இ.உதயசூரியன் , ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ப.தமிழரசன் ஆகியோர் வரவேற்பில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.லோகேஷ் முன்னிலையில் நடைபெற்றது. இதில் தலைமை கழக பேச்சாளர்கள் பொன்னேரி சிவா ராஜராஜேஸ்வரி சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். உடன் மு.பகலவன், மு.கதிரவன், எம்.எல்.ரவி, வெ.அண்பு வாணன், கே.சுப்பிரமணி, ஆ.ராஜா, வெ.ஆனந்தகுமார், எம்.டி.ஜி.கதிர்வேல், மோகன் சுந்தர், இ.செல்வமணி, செ.யுவராஜ், டி.சங்கர், இரா.கதிரவன், வி.தமிழரசன், ராம்முகேஷ், அருண் செல்வம், கோபாலகிருஷ்ணன், நரேன், அசோக், பொன்னரசு, உள்பட பலர் உள்ளனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

# “அன்னம் தரும் அமுத கரங்கள் திட்டம்” !

## 20.06.2025 முதல் 02.07.2025 வரை நடைபெறும் இடங்களின் விவரம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை,ஜூன்.19-

“அன்னம் தரும் அமுத கரங்கள்” கீழ்கண்ட நாட்களில் நடைபெறும் விவரம் பின்வருமாறு:

நாள் 20.6.25 வெள்ளிக்கிழமை 121 ஆம் நாள்

**அம்பத்தூர் வடக்கு பகுதி**

1) வட்டம் 79 (அ) வெங்கடேஸ்வரா நகர் மெயின் ரோடு

வட்ட செயலாளர் பு. வீரா (எ) வீர்ராகவன்

2) வட்டம் 79 காந்தி நெடுஞ்சாலை (C.S.I சர்ச் எதிரில் ) ஓரகடம்

வட்ட செயலாளர் வே. ரவீந்திரன்

நாள் 21.6.25 சனிக்கிழமை 122 ஆம் நாள்

**கொளத்தூர் மேற்கு பகுதி**

1) வட்டம் 65: கங்கா தியேட்டர் அருகில். வட்ட செயலாளர் N.சௌந்தர்

2) வட்டம் 66 ஸ்ரீ நகர் காலனி சந்திப்பு ரெட்டேரி அருகில் வட்ட செயலாளர், N.ராமச்சந்திரன்

நாள் 22.6.25 ஞாயிறு 123 ஆம் நாள்

**வில்லிவாக்கம் கிழக்கு பகுதி**

1) வட்டம் 97, என்.எம்.கே தெரு ( அயனாவரம் மார்க்கெட்)

வட்டச் செயலாளர்: விக்னேஷ் சீனிவாசன்

2) வட்டம் 97-அ, பழனி ஆண்டவர் கோயில் தெரு, வட்டச் செயலாளர், ச. மனோகரன்

நாள் 23.6.25 திங்கட்கிழமை 124 ஆம் நாள்

**திரு.வி.க நகர் தெற்கு பகுதி**

1) வட்டம் 75 கே.எச் ரோடு வட்ட செயலாளர் வி.க. வெங்கடேசன்

2) வட்டம் 75 அ எஸ்.எஸ் புரம் (ஆ) பகுதி தலைமை விவசாய அணி மாவட்ட அமைப்பாளர் இரா. வீரமணி

நாள் 24.6.25 செவ்வாய் கிழமை 125ஆம் நாள்

**கொளத்தூர் கிழக்கு பகுதி**

1) வட்டம் 68 -வால்மீகி தெரு கம்பர் நகர் வட்ட செயலாளர் P.ஆதவன் மணி

2) வட்டம் 66அ- ரங்க சாமி தெரு வெற்றி நகர் வட்ட செயலாளர் P.ஊமை துரை

நாள் 25.6.25 புதன்கிழமை 126 ஆம் நாள்

**வில்லிவாக்கம் மேற்கு பகுதி**

1) வட்டம் 94 அ மொப் புலி அம்மன் கோயில் தெரு வட்டச் செயலாளர், ஆர். தீனதயாளன்

2) வட்டம் 95 அ பாரதி நகர் இரண்டாவது தெரு வட்ட செயலாளர், பா. ஜானி

நாள் 26.6.25 வியாழக்கிழமை 127 ஆம் நாள்

**திரு.வி.க நகர் வடக்கு பகுதி**

1) வட்டம் 71 பாரதி சாலை (வெள்ளையன் மார்க்கெட் அருகில்) வட்ட செயலாளர் பரிமளா சுரேஷ் பாபு

2) வட்டம் 74 அ சந்திர யோகி சமாதி சாலை வட்ட செயலாளர் G. கிருஷ்ண குமார்

நாள் 27.6.25 வெள்ளிக்கிழமை 128 ஆம் நாள்

**எழும்பூர் வடக்கு பகுதி**

1) வட்டம் 77 டிம்லஸ் ரோடு அருகில் கே.பி பார்க் குடிசை மாற்று வாரியம்

செயலாளர் தி. தயாளன்

2) வட்டம் 78 தானா தெரு வட்ட செயலாளர் சு. மனோகரன்

நாள் 28.6.25 சனிக்கிழமை 129 ஆம் நாள்

**துறைமுகம் தொகுதி:**

**1) துறைமுகம் கிழக்கு பகுதி:**

வட்டம் 56அ - வள்ளுவர் நகர் பிரகாசம் சாலை பிராட்வே, வட்ட செயலாளர் எம்.பரத்குமார்

**2) துறைமுகம் மேற்கு பகுதி**

வட்டம் 54 அ, உட்வார்ப் 2 வது சந்து, வால்டாக்ஸ் ரோடு, பா.கதிரவன், வட்ட செயலாளர்

நாள் 29.6.25 ஞாயிற்றுக்கிழமை 130 ஆம் நாள்

**அம்பத்தூர் கிழக்கு பகுதி**

1) வட்டம் 83 சிவன் கோயில் எதிரில் சிவலிங்கபுரம் கொரட்டூர் அக்ரகாரம்

வட்ட செயலாளர், சீ. லோகநாதன்

2) வட்டம் 83 அ ஆர். கே லிங்க் ரோடு தாதங்குப்பம் வட்ட செயலாளர், சு. மோகன் குமார்

நாள் 30.6.25 திங்கட்கிழமை 131 ஆம் நாள்

**துறைமுகம் தொகுதி**

1) துறைமுகம் கிழக்கு பகுதி

வட்டம் - 55, ஏழு கிணறு பூங்கா அருகில் ஏழுகிணறு தெரு

வட்ட செயலாளர், எஸ். சத்யநாராயணன்

2) துறைமுகம் மேற்கு பகுதி

57 அ வட்டம், அண்ணா பிள்ளை தெரு, ஆச்சரப்பன் தெரு சந்திப்பு, பா.அண்ணாதுரை, வட்ட செயலாளர்

நாள் 1.7.25 செவ்வாய்க் கிழமை 132 ஆம் நாள்

**அம்பத்தூர் தெற்கு பகுதி**

1) வட்டம் 88 படவேட்டம்மன் கோயில் தெரு சந்திப்பு பிள்ளையார் கோவில் அருகில் வட்ட செயலாளர், சி. சீனிவாசன் மற்றும் R. கதிரவன், பகுதி துணை செயலாளர்

2) வட்டம் 87 அங்க முத்து நகர் பாடி வட்ட செயலாளர்: த. பிரகாஷ் குமார்

நாள் 2.7.25 புதன்கிழமை 133 ஆம் நாள்

**எழும்பூர் தெற்கு பகுதி**

1) வட்டம் 61 தமிழ் சாலை (குழந்தைகள் நல மருத்துவமனை அருகில்)

வட்ட செயலாளர்: டால்பின் ஹரி

2) வட்டம் 61 அ அய்யா சாமி தெரு குடிசை பகுதி L.G ரோடு

வட்ட செயலாளர்: E. மொய்தீன்

மேற்கண்ட காலை உணவு வழங்கும் நிகழ்ச்சியில் திட்ட ஒருங்கிணைப்பாளர்களாக சொ.வேலு, எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக் குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் செயல்படுவார்கள்.

மேற்கண்டவாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் - பி.கே.சேகர் பாபு தெரிவித்தள்ளார்.

---

### கே.ஜி.பாஸ்கர் சுந்தரம் ஆலோசனை வழங்குகிறார்!

# மாங்காடு நகரத்தில் பாக வாரியாக கள ஆய்வுக் கூட்டம்!

## நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஜூன்.18-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், மாங்காடு நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

கடந்த 7.6.2025 அன்று நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர்கள் தொகுதி மேற்பார்வையாளர்கள் கூட்டத்தில் "ஓரணியில் தமிழ்நாடு" என்கிற கொள்கை முன்னெடுப்பின்படி ஒவ்வொரு வாக்கு சாவடியிலும் 30 விழுக்காடு வாக்காளர்களை புதிய உறுப்பினர்களாக இணைத்தல் மற்றும் வார்டு பாக வாரியாக கள ஆய்வுக் கூட்டம் கழகத் தலைவர் - தமிழ்நாடு முதல்வர் அவர்களும் மற்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளரும் குறு - சிறு தொழில் நிறுவனங்கள் துணை அமைச்சருமான தா.மோ.அன்பரசன், கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. ஆகியோர் வழிகாட்டுதலின்படி 19,20 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் திருப்பெரும்புதூர் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் கே.ஜி. பாஸ்கர் சுந்தரம் பங்கேற்று ஆலோசனை வழங்குகிறார்.

19.6.2025 வியாழன், மாலை 4 மணி - 142வது பாகம் - சாதிக் நகரிலும்,

4.30 மணி - 143வது பாகம் - சக்ரா நகரிலும்,

5 மணி -145வது பாகம் - ஓம் சக்தி நகரிலும்,

5.30 மணி - 146வது பாகம் - பத்மாவதி நகரிலும்,

6 மணி -147 வது பாகம் - பாலாஜி நகரிலும்,

6.30 மணி - 160வது பாகம் - சிவானந்த நகரிலும்,

இரவு 7 மணி - 164வது பாகம் அப்பாவு நகரிலும் கள ஆய்வுக் கூட்டம் நடைபெறுகிறது.

20.6.2025 வெள்ளிக்கிழமை, மாலை 5 மணி - 162வது பாகம் - மீரா நகரிலும்,

6 மணி -148வது பாகம் - பத்ரிமேடிலும்,

6.30 மணி - 149வது பாகம் - எம்.ஜி.ஆர்.நகரிலும்,

இரவு 7 மணி - 150வது பாகம் - எம்.ஜி.ஆர். நகரிலும், 7.30 மணி - 152வது பாகம் - அம்பாள் நகரிலும் கூட்டம் நடைபெறுகிறது.

எனவே வார்டு பாகங்களுக்கு உரிய வாக்குச் சாவடி நிலை முகவர்கள் (BLA 2), தேர்தல் பணிக் குழு உறுப்பினர்கள் (31 நபர்கள்), 100 வாக்காளர்களுக்கு ஒரு முகவர் (BLC), மற்றும் வார்டு செயலாளர்கள், நகர கழக நிர்வாகிகள், வார்டு கழக நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், கழக முன்னணியினர், அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு இக்கூட்டத்தை சிறப்பிக்குமாறு நடத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

# இளைஞர்களை ஒன்றிணைத்து வெல்வோம்!



இந்தியத் திருநாட்டின் ஈடு, இணையற்ற ஜனநாயகப் பேரியக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இன்றையத் தலைவர், திராவிடப் பேரரசர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியவர்கள் ஜூன் மாதம் 1ந்தேதி மதுரை மாநகரில் நடைபெற்ற கழகத்தின் 102 வது பொதுக்குழுவில் அறிவித்த பல திட்டங்களில், குறிக்கோள்களில், இலட்சியங்களில் தமிழர்க்கு அரணாம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தமிழ்நாடு வாக்காளர்களில் 30 சதவீதம் பேர் கழகத்தின் உறுப்பினர்களாக்கப் படவேண்டும் என்ற உணர்வுபூர்வமான அறிவிப்பினை செயல்படுத்த துவங்கும் நாள் இந்த ஜூன் மாதம் 20 அன்று தமிழகமெங்குமுள்ள கழகத் தளகர்த்தர்களால் ஆரம்பிக்கப்பட உள்ளது.

வரலாற்றைத் திரும்பிப்பார்த்தால், தந்தை பெரியாரின் கொள்கை மாறுபாடுகளில் வேறுபாடு கண்ட அறிஞர் அண்ணா அவர்களைத் தொடர்ந்து அவர்தம் தம்பியர் தவித்திட்டிருந்த நிலையில் 1949 செப்டம்பர் 3 தேதியிட்ட மாலைமணியில் புதிய அறிவிப்பு வெளியானது.

திராவிட கழகத் தோழர்களின் எதிர்கால செயல்திட்ட அமைப்புக்கான ஆலோசனைக் கூட்டம் 17 செப்டம்பர் 1949 அன்று சென்னை பவழக்காரத்தெரு ஏழாம் எண் இல்லத்தில் நடைபெறும் என பேரறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்தார்.

அண்ணாவின் தம்பியரிடையே மகிழ்ச்சி பரவியது. திராவிடக் கழகத்தின் மத்திய நிர்வாகக்குழு குடந்தை கே. கே. நீலமேகம் தலைமையில் கூடியது.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட பல முக்கிய முடிவுகளில் புதிதாக அமைப்புக்குழு உருவாக்கப்பட்டு தலைவராக கே. கே நீலமேகமும், என். வி. நடராசன் செயலாளராகவும் நியமிக்கப்பட்டனர். மறுநாள் ( 18 செப்டம்பர் 1949 ) அமைப்புக்குழு கூடி விவாதித்து சில முடிவுகளை எடுத்தனர்.

நாம் இதுவரையில் பரப்பிவந்த கொள்கைகளையும், தொடர்ந்து பரப்பவும், உடனடியாக வேலைகளைத் தொடங்கி நடத்தவும் நாம், “ திராவிட முன்னேற்றக் கழகம் “ என்ற அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு செயலாற்றுவதென அமைப்புக்குழு தீர்மானித்தது.

புதிய கழகத்தின் பொதுச்செயலாளராக அண்ணா அவர்கள் இருந்து வழிநடத்த வேண்டும் என்று அந்த அமைப்புக்குழு கேட்டுக் கொண்டது. இதோடு 110 பேர் கொண்ட பொதுக்குழு, பிரச்சாரக்குழு, அமைப்புக்குழு, நிதிக்குழு ஆகியவை உருவாக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயர் சட்டென்று முடிவெடுத்து அறிவிக்கப்பட்ட பெயர் அல்ல.

தனது ஆதரவாளர்கள், முக்கிய தலைவர்கள் பலருடனும் ஆலோசனை செய்து, அண்ணா அவர்கள் தேர்ந்தெடுத்தப் பெயர் தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

முன்னதாக, தமிழ்நாடு சோஷலிஸ்ட் கட்சி, திராவிட சோஷலிஸ்ட் கழகம், திராவிட சமதர்மக் கழகம், திராவிட சமுதாயக் கழகம், திராவிட தீவிரவாதிகள் கழகம் என பல பெயர்கள் பரிசீலிக்கப்பட்டு, இறுதியில் Dravidan Progressive Federation என்று அர்த்தம் வரும் வகையில் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயர் உறுதியானது.

புதிய கட்சி தொடங்கப்பட்டு விட்டது. இந்த செய்தியை தொண்டர்களுக்கும், பொதுமக்களுக்கும் சொல்லவேண்டும் எனில் பொதுக்கூட்டம் போட்டு முறைப்படி அறிவிக்க வேண்டும் என்று முடிவானது.

சென்னை ராயபுரத்தில் இருக்கும் ராபின்சன் பூங்கா அத்தகு வரலாற்றுப் பெருமையை தனக்கு சூடிக்கொண்டது.

இப்படி கண்ணீர்த்துளிகள் என்று தந்தை பெரியார் அவர்களால் கடுஞ்சொற்கள் கொண்டு விமர்ச்சிக்கப்பட்ட இயக்கம்தான் இன்று அண்ணல் யானை, அணிதேர்ப்புரவி, ஆட்பெரும் படையோடு மன்னாதி மன்னர்களை கொள்கைவழி வீழ்த்தி திராவிடப் பெருவேந்தர் தளபதியவர்களின் தலைமையில் கம்பீரமாய் காட்சி தருகிறது.

இன்று எத்தனை, எத்தனை பரிணாம வளர்ச்சி! தகவல் தொழில்நுட்ப பெருவளர்ச்சி கழகத்தின் கொள்கைகளை கனப்பொழுத்தில் கடைசித் தொண்டனையும் சென்று சேர்ந்தடைகிறது!

ஆரம்பத்தில் தேர்தலே இல்லையென துவக்கப்பட்ட இயக்கத்தை ஒரு பக்கம் பெரியார், இன்னொரு புறம் காங்கிரஸ், பெரும் பணக்காரர், ஜமீன் நிலச்சுவான்தார்கள், ஆலைமுதலாளிகள் இவர்களைக் கடந்து இயக்கத்தை வளர்க்க, அண்ணா, தலைவர் கலைஞர், நாவலர், என் வி. என், மதியழகன் இன்னும் இன்னும் எத்தனை தலைவர்கள் சிந்திய வியர்வை போற்றுதலுக்குரியது. இதற்கு கலைத்துறையும் கை கொடுத்தது.

அண்ணா, கலைஞர் போன்றோரின் எழுத்தும், பேச்சும், கலைத்துறைப்பணியும், சமூகத்திலே, படித்திட்ட மற்றும் பாமர நடுத்தட்டு மக்களிடையே ஏற்படுத்திய மாற்றம் ஒரு சமூக புரட்சி என்றே சொல்லலாம்.

புதிதாக ஒரு இளைஞர் திமுக உறுப்பினரென்றால், நிச்சயம் அவர் தந்தை ஒரு காங்கிரஸ்காரராகவோ, அல்லது ஆன்மீகத்தில் பழுத்த பண்பினராகத் இருந்திருப்பார்.

கடவுள் இல்லை என்னும் கட்சி! தேசிய உணர்விற்கு எதிரான கட்சி! உருப்படாதோர் கட்சி என்றுதான் ஆரம்பத்தில் நமது இயக்கம் அடிபட்டு, வதைப்பட்டு வளர்ந்தது.

ஒருவர் ஊரில் செல்வாக்கு மிகுந்தவராக இருப்பார். பெரும் செல்லந்தாரகவும் இருப்பார். திமுகவிற்கு, இயக்கவளர்ச்சிக்கு நிதியுதவி செய்துமிருப்பார். ஆனால் திமுக உறுப்பினராக இல்லாமல் திமுக அனுதாபி என்ற அடைமொழியோடு வலம் வருவார்.

இன்றைக்கு இரண்டு கோடி உறுப்பினர்களைக் கொண்ட மகத்தான ஜனநாயகப் பேரியக்கமாம் கழகத்திற்கு ஆரம்பத்தில் உறுப்பினர் பலம் சில ஆயிரங்களைக் கடந்தாலே, கழக ஏடுகள் திராவிடநாடும், முரசொலியும், நம்நாடும் பார்த்தீர்களா! பார்த்தீர்களா! “ உடுப்பணியா இராணுவ துருப்புக்களாக அண்ணாவின் தம்பியர் 5000 பேர் திமுகவின் உறுப்பினராகிப் பெருமை கொள்கின்றனர் என்று எழுதிப் புளகாங்கிதம் அடைந்தன.

1961 ல் கழகத்தில் கலகம் விளைவித்த கும்பலின் செயலால் புண்பட்ட அண்ணாவின் வெண்பட்டு இதயத்திற்கு இதமாகவும், கவலைதோய்ந்த தலைவர் கலைஞரின் சிந்தைக்கும் மொத்தத்தில் கலக்கிக் கிடந்த கழகத்தவர் அனைவரும் தெளிவும், பொலிவும், வலிவும் பெற்றிடும் வண்ணம் 21.6.1961 தேதியிட்ட முரசொலியில் மாமேதை மாறன் அவர்கள், “ காஞ்சியில் நடந்த கலந்துரையாடல்!” என்று தீட்டிய தலையங்கத்தில் இயக்க வளர்ச்சி, புதுக் கட்சியின் தளர்ச்சி ( தமிழ் தேசிய கட்சி ) இவற்றைப் பதிவு செய்து, கழகத்திலிருந்து பிரிந்து சென்றவர் 411 பேர்.

அவர்களது விலகலுக்குப்பின் கழகத்தின் உறுப்பினர்களாக இருப்போர் 8706 பேர் என ஆதாரங்களோடு எழுதியிருந்தார்.

விஞ்ஞான வளர்ச்சி, ஊடக சாம்ராஜ்ஜியத்தின் வலிமை, தகவல் தொழில்நுட்ப பணி, என இன்றைக்கு எந்த கட்சியானாலும் எல்லா வசதிகளும் நிறைந்துள்ளது. கொள்கையில்லாத கோமாளி கூட்டங்கள் கூட கோட்டைக்கு போக கும்மாளமிடுங்காலம்.

பணத்தை போட்டு, பாட்டைக் கேட்கலாம் என்ற பகல் கனவு.

மோகனத்தில் தொடங்க நினைத்து, முகாரியில் முடியும் அவலம் என வரிசைப்படுத்தலாம்.

ஆனால் ஆரம்பத்தில் ஒரு இயக்கத்தின் கொள்கை, கோட்பாடு, லட்சியம், அன்றைய ஆளுங்கட்சியின் அதிகார துஷ்பிரயோக ஆணவப்போக்கு, ஏழைபடும் பாடு, விலைவாசி உயர்வு, தமிழ் மொழியின் வலிமை, வளமை இற்றையெல்லாம் எடுத்துரைக்க, பேரறிஞர் அண்ணா அவர்கள் மாலைநேரக் கல்லூரி வகுப்புகள் என்று குறிப்பிட்ட திமுகவின் பொதுக்கூட்டங்களே இவற்றையெல்லாம் பிரச்சாரம் என்ற ஒற்றைக் களமாக ஓங்கி ஒலித்தது.

40 ஆண்டுகளுக்கு முன்னர் ( இந்த வரிகளை, வலிகளை தியாகப் பெருவேள்வியில், தீட்டிய வாளாக உருபெற்ற திராவிடப் பேரரசர் தலைவர் அவர்கள் நிச்சயம் ஏற்ப்பார்கள் )



வழக்கறிஞர்

**வெ.அன்புவாணன்**

கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்

ஒன்று பட்ட செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ளடங்கிய, இன்றைய திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தைச் சார்ந்த எங்கள் ஆரணிப் பேரூரில் எனது தந்தை மறைந்த தலைமை இலக்கிய அணி துணைச் செயலாளர் கோ. வெற்றிவீரன் அவர்கள் ஆரம்பத்தில் அறிவகத்தில் பணி புரிந்ததாலும், அண்ணா, தலைவர் கலைஞர், பேராசிரியர் முரசொலி மாறன் போன்ற திராவிட ஆளுமைகளுடன் நெருங்கிய தொடர்பிலிருந்ததாலும் கழகத்தின் முன்னணி சொற்பொழிவாளர் பலரை அழைத்து வந்து, பொதுக்கூட்டங்கள் நடத்துவார்.

வெற்றிகொண்டான், ஆடலரசு, தஞ்சை கூத்தரசன், சிங்காரசடையப்பன், புலவர் சாமி நாகப்பன், கவிஞர் பொன்னிவளவன், காக்கா ராதாகிருஷ்ணன், ரகுமான் கான், என். வி. என் சோமு, கோடையிடி குமார், எஸ். பி. சற்குணம், புதுக்கோட்டை தமிழரசி எம் எல். சி, திருச்சி செல்லேந்திரன், வண்ணை ஸ்டெல்லா, வண்ணை தேவகி, நன்னிலம் நடராசன், காளிமுத்து, தீப்பொறி ஆறுமுகம், கோவை மு. ராமநாதன், கோவை. மணியன், விடுதலை விரும்பி, சீரணிசண்முகம், பலகுரலரசு முருக பாண்டியன், போலீஸ் கண்ணன், அண்ணா ஓர் காவியம் ராஜ்மோகன், என இன்னும் இன்னும் எத்தனையோ சொற்பொழிவாளரை கொள்கை முழக்கமிடச் செய்வார்.

இப்போது போல் அல்லாமல், பொதுக்கூட்ட சுவரொட்டிகள் ( போஸ்டர்கள் )

அச்சடிக்கும் வசதிகள் உள்ளூரில் இருக்கவில்லை.

சென்னை 14.அண்ணாசாலை பி. ஆர் அன்ட் சன்ஸ் பக்கமாக ஓட்டிச் செல்லும் சுங்கு அக்ரகாரம் தெருவில் சென்றால், இரண்டு குறுக்குச்சாலைகளைக் கடந்தால், ஒரு பெரிய தபால் பெட்டி இருக்கும்.

அதற்கு பக்கத்தில் பாண்டுரங்கா லித்தோ பிரஸ், கணேஷ் லித்தோ இருக்கும். இங்கு தான் பொதுக்கூட்ட சுவரொட்டி ஆர்டர் தருவார். அதன் அளவே 30/40 ( தர்டி பார்ட்டி ஒரு பிட் ) இதை வாங்கி வர பள்ளி மேல் நிலை வகுப்பில் பயின்ற எனக்கு சென்னை சென்று வர அவர் தரும் கைச்செலவு ஐந்து ரூபாய்.

இவற்றிற்கெல்லாம் கண்கண்ட சாட்சிகள்; இன்றும் கழகத்தின் தொடர்பணியாற்றும் எங்கள் மாவட்ட அவைத்தலைவர் மு. பகலவன், முன்னாள் பேரூர் செயலாளர்கள் டி. கண்ணதாசன், ஜி. பி. வெங்கடேசன்

நினைத்துப் பார்த்தால் எவ்வளவு பெரும் காலகட்டங்களைக் கடந்து இந்த இயக்கம் வளர்ந்திருக்கிறது!

கொள்கையை பல வகைகளில், வலிகளில், வழிகளில் சொல்லி, மக்கள் மனங்களை வென்று, ஆளுங்கட்சி அந்தஸ்தை ஆறுமுறை அடைந்து, அவணி போற்றும் நல்லாட்சி தந்து, கடமை, கண்ணியம், கட்டுபாடு , எனும் திமுக மூன்றெழுத்து இயக்கத்தின் மூன்றாவது முதலமைச்சராகப் பெறுப்பேற்று, திராவிட மாடல் ஆட்சி புரியும் திராவிடப் பெருவேந்தர் தளபதியவர்கள் அழைக்கிறார்கள்.

தாயகத்து இளைஞர்களை!

மாயவலைகண்டு மயங்காமல், காகிதப்பூக்களையும், காவி ருத்ராட்ச கூடாரங்களை, நாடாமல், நாடு காக்கும் நல்லியக்கமாம் முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினராக!

ஜூன் 20 அன்று தமிழ்நாடு முழுவதும் துவக்கப்படும் நிகழ்வு, அலைகடலாய் பெருகிட, அகண்ட காவிரியாய் காட்சிதர சாட்சிகளாய் நின்று கடமையாற்றுவோம்!

தலைவரின் கட்டளையை நிறைவேற்றும்!

தமிழ்நாடு இளைஞர்களை ஒன்றிணைத்து வெல்வோம் 200 !

படைப்போம் புதிய வரலாறு!